## PROCEEDINGS OF THE DIRECTOR OF GOVERNMENT EXAMINATIONS.

## CHENNAI – 600 006.

**PRESENT: D.VASUNDARADEVI, M.A., M.Ed., M.Phil.,**
**Director (I/c)**

**R.C.No.023714/B1/2015** **Dated : 12 .11.2015**

**Sub :** School Education Department - X Std Board Exam 2016 – Directorate of Government Examinations, Chennai – 6 – Part IV Minority Language Conduct of Examination – Preparation of Nominal Roll – Instructions Issued – reg.

**Ref:** Principal Secretary, School Education Department, Chennai – 9, D.O. Letter No 25714/GE1/2015, Dated 11.11.2015.

-----

**ORDER:**

I invite your kind attention to the reference letter cited (copy enclosed).

As per the pattern of the Tamil Nadu Tamil Learning Act 2006 in the forth coming 2016 X Standard Board Examination all the candidates studying in schools and direct private candidates should take exam in

| | | |
|---|---|---|
| Part I | Tamil | Compulsory |
| Part II | English | Compulsory |
| Part III | Maths, Science, Social Science | Compulsory |

As per the provisions of the Tamil Nadu Tamil Learning Act, 2006 all students taking the X Standard Board Examination in 2016 shall write Tamil under part I. For those students who do not have either Tamil or English as their mother tongue, examination under Part IV will be conducted for their mother tongue as an optional subject. The marks obtained by them under Part IV will be indicated in the X Standard mark sheet but will not be taken into account for eligibility for pass.

2...

Suitable instructions should be issued to all Headmasters of schools under your jurisdiction to keep all the above datas ready for preparation of Nominal Roll without leaving any particulars and the same may be uploaded when this Department announces the date for uploading this data.

Also the above instructions should be given to all Government Examinations Service Centres for registering direct Private Candidates for X Standard Board Exam March/April 2016.

As this issue is a sensitive one, I wish you all to bestow your personal attention in this matter and give necessary detailed instructions to all Headmasters, so that Nominal Roll should be prepared taking into account Part I Language Tamil as compulsory subject for all students along with Part II English and Part III Maths, Science, Social Science. And for those students who do not have either Tamil or English as their mother tongue can opt for Part (IV) (Minority Languages).

The receipt of this proceedings may be acknowledged by next mail. A copy of instructions issued to all schools shall be sent without fail.

13/11/2015.

**Director (i/c)**

**Encl:**
Reference letter cited.

**To**

1. The Director of School Education, Chennai - 6
2. Director of Matriculation Schools, Chennai – 6
3. All Chief Educational Officers
4. All District Educational Officers
5. All Inspectors of Matriculation Schools.
6. All Regional Deputy Directors.
7. All Officers & All Sections (Office)

Copy submitted to : The Principal Secretary,
School Education Department,
Chennai – 9 – For kind information

சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல் முறைகள்

முன்னிலை : தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
இயக்குநர் (பொ)

ந.க.எண்.023714/பி1/2015 நாள். 17 .11.2015

பொருள்: அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு – மார்ச் / ஏப்ரல் 2016 – பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரித்தல்– சிறுபான்மை பாடங்களை பகுதி IV (Part IV) –ல் பூர்த்தி செய்தல் – சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்கள் அல்லாத பள்ளிகள் "இன்மை" அறிக்கை வழங்க அறிவுறுத்தல் – தொடர்பு.

பார்வை:
1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல் முறைகள் ஆணை, நாள்.24.07.2015.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட நினைவூட்டுக் கடிதம், நாள்.30.10.2015.
3. Principal Secretary to Government, School Education Department, Chennai-6 D.O. Letter No.25714/GE1/2015. Dated.11.11.2015.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் ஆணை எண், நாள்.12.11.2015.

-------

ஆணை:

நடைபெறவுள்ள மார்ச் / ஏப்ரல் 2016 இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவ / மாணவியரிடமிருந்து உறுதிமொழிப் படிவம் (Declaration form) பூர்த்தி செய்து பெற்று தயார் நிலையில் வைக்க வேண்டிய பணியினை 31.08.2015–க்குள் நிறைவு செய்ய பார்வை 1–ல் காண் செயல்முறைகள் ஆணையில் ஏற்கனவே இவ்வியக்ககத்தால் அறிவுறுத்தப்பட்டது.

பார்வை 2–ல் காண் நினைவூட்டுக் கடிதத்தில் மேற்படி பணியில் பள்ளி ஏதும் விடுபடாமலும், மாணவர் பெயர் ஏதும் விடுபடாமலும், அப்பணியினை விரைந்து முடிக்கவும், பெயர்ப்பட்டியல் தயாரிக்க தயார் நிலையில் படிவங்களை வைத்திருக்கவும் நினைவூட்டப்பட்டது.

பார்வை 3–ல் காணும் பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் நேர்முகக் கடிதத்தில் மார்ச் 2016–ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களுள் தமிழ் மற்றும் ஆங்கிலம் அல்லாத பிற சிறுபான்மை மொழிகளை தாய்மொழியாகக் கொண்டு பயிலும் மாணவ / மாணவியர் அவரவர் சிறுபான்மை மொழிகளில் அவர்களது விருப்பத்தின் பேரில் பகுதி IV (Part IV)–ல் தேர்வெழுத அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், தற்போது பகுதி IV–ல் தேர்வெழுத அனுமதிக்க வேண்டிய சிறுபான்மை மொழிகளும் அதன் பாடக் குறியீடுகளும் (Subject Code) பின்வருமாறு:

| வ.எண். | பகுதி IV (Part IV)<br>சிறுபான்மை மொழி<br>**Optional Subject / பாடக்குறியீடு** | |
|---|---|---|
| 1. | Telugu | 12 |
| 2. | Malayalam | |
| 3. | Kannada | |
| 4. | Urdu | |
| 5. | Hindi | |
| 6. | Sanskrit | |
| 7. | Arabic | |
| 8. | French | |
| 9. | Gujarathi | |

- மேற்படி சிறுபான்மை மொழிப்பாடங்களுக்கு ஒரே தாள் கொண்ட தேர்வு மட்டுமே நடத்தப்படும்.
- சிறுபான்மை மொழிப்பாடங்களில் மாணவ / மாணவியர் பெறும் மதிப்பெண்கள் பத்தாம் வகுப்பு தேர்ச்சிக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- மாணவ / மாணவியர் பெறும் மதிப்பெண்கள் மதிப்பெண் பட்டியலில் பதிந்து வழங்கப்படும்.
- சிறுபான்மை மொழிகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பு (Blue Print) சென்னை–6, பள்ளிக் கல்வி இயக்ககம் மூலம் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

பகுதி IV–ல் (Part IV) தேர்வெழுதவுள்ள மாணவ / மாணவியர்களின் பாடங்களையும், பாடக் குறியீட்டையும், ஏற்கனவே பூர்த்தி செய்து வைத்திருக்கும் Declaration Form-ல் சேர்த்து தயார் நிலையில் வைத்திருக்க தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து வகையான மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்த அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக மாவட்டக் கல்வி அலுவலர்கள் அவரவர் ஆளுகைக்குட்பட்ட அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் கூட்டத்தினை உடன் கூட்டி பெயர்ப்பட்டியல் தயாரிக்க அனைத்து விவரங்களையும் தயார் நிலையில் வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துறையால் அறிவிக்கப்படும் தேதியில் பகுதி IV Optional subjectஐ உள்ளடக்கிய மென்பொருளை பள்ளிகள் தங்களது User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி www.tndge.in என்ற இணையதளத்தில் (website) login செய்து மார்ச் 2016 எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கான மேற்படி விவரங்களை Online–ல் பதிவேற்றம் செய்திட தவறாது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துவதுடன், எந்த ஒரு மாணவரும் சிறுபான்மை மொழி பாடத்திற்கான தேர்வு குறித்து தனக்கு தெரியாது என்று பின்னர் தெரிவிக்கக் கூடாது என்பதை வலியுறுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்கள் அல்லாத பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடமிருந்து "சிறுபான்மை மொழி பயிலும் மாணவ / மாணவியர் எங்கள் பள்ளியில் எவரும் இல்லை" என்ற "இன்மை" சான்றிதழை தம் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலிருந்தும் பெற்று ஒருங்கிணைத்து உரிய அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தில் 26.11.2015–க்குள் சமர்ப்பிக்கவும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் பின்வரும் சான்றிதழினை அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் சான்றொப்பமிட்டு இத்துறைக்கு அனுப்பிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>சான்றிதழ்</u>

மார்ச் 2016–ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினில் எனது ஆளுகைகுட்பட்ட க்அனைத்து பள்ளி மாணவர்களும் நேரடி தனித்தேர்வர்களும் பகுதி I–ல் தமிழ் மொழிப் பாடத்தை கட்டாயம் தேர்வெழுத வேண்டும் என்பதுடன், தமிழ் மற்றும் ஆங்கிலம் அல்லாத சிறுபான்மை மொழியினை தாய்மொழியாகக் கொண்ட தேர்வர்கள் அவரவர் விருப்பத்தின் பேரில், Part IV –ல் சிறுபான்மை மொழிப் பாடத்தை ஒரு தாள் கொண்ட தேர்வாக எழுத அனுமதிக்கப்படுவர் என்ற விவரத்தையும், இவ்விவரங்களை தவறாது பெயர்ப்பட்டியலில் பதிந்து அனுப்ப வேண்டும் என்ற விவரத்தினையும் அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டதுடன், இங்ஙனம் சிறுபான்மை மொழி தேர்வெழுதும் மாணவர்கள் எவரும் இல்லை எனில் "இன்மை" அறிக்கை அளித்திடவும் கட்டாயமாக வலியுறுத்தப்பட்டது எனவும் சான்றளிக்கிறேன்.

மாவட்டக் கல்வி அலுவலர்

விரைவில் தேர்வுத் துறையால் அறிவிக்கப்படும் தேதியில், தற்போது பகுதி IV பாடத்தை உள்ளடக்கிய மென்பொருளில் அனைத்து மாணவ / மாணவியரின் பெயர்ப்பட்டியலையும் கணினியில் Upload செய்யும் வகையில் Declaration Form –ஐ தயார் நிலையில் வைத்திருக்க அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களும் மீளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இப்பொருள் மீது தங்களின் நேரடி தனிக்கவனத்தை செலுத்திடுமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் இச்செயல்முறைகள் பெற்று கொண்டமைக்கான ஒப்புதலை உடன் வழங்கிடுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–

**இயக்குநர் (பொ)**

பெறுநர்:

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆய்வாளர்கள்
3. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி
4. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மேற்படி பணியினை மேற்கொள்கிறார்களா என்பதனை ஆய்வு செய்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது).

நகல்:

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6
2. இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6 தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்களுக்கும் மேற்படி விவரத்தினை தெரிவித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. அனைத்து மண்டலத் துணை இயக்குநர்கள்
   – தங்களின் தனிக்கவனத்தை செலுத்தி இச்செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளவாறு அனைத்து பணிகளையும் தலைமை ஆசிரியர்கள் முடித்துள்ளனரா என ஆய்வு செய்து, ஆய்வின் அறிக்கையையும், சிறுபான்மை மொழிப்பாடம் இல்லாத பள்ளிகளிலிருந்து இன்மை அறிக்கையையும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெற்று ஒருங்கிணைத்து 27.11.2015 அன்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பவும் தெரிவிக்கப்படுகிறது.
4. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை – 600 009 – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.